

# சீனா பார்டர் வரை...

## தார், ஸ்கார்ப்பியோக்களில் ஒரு தாறுமாறு டிரைவ்!

கிடு கிடு பள்ளங்களும், நெடிதுயர்ந்த மலைத்தொடர்களும் நிறைந்த இமய மலையின் மடியில் இருக்கிறது ஸ்பிட்டி பள்ளத்தாக்கு. இது சாகச விரும்பிகளின் புண்ணிய பூமி. மஹிந்திரா கார் ஓட்டிகளுக்கு இது பூலோக சொர்க்கம். நரம்புகளை உறைய வைக்கும் குளிர்காற்றையும் மீறி, கடல் மட்டத்தில் இருந்து சுமார் 14,800 கி.மீ உயரத்தில் எஸ்யூவியை ஓட்டுவது, மேகத்தில் நீந்துவதைப் போன்றதொரு அனுபவத்தைக் கொடுக்கும்.

மஹிந்திராவின் ஹிமாலயன் ஸ்பிட்டி எஸ்கேப் 2019 சாகசப் பயணத்துக்காக பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் தொடங்கி சிம்லா, நார்க்கண்டா, சாங்லா, நாக்கோ, காஸா, மணாலி என்று 9 நாட்கள், முழுக்க முழுக்க மலைப் பாதைகளில் 1200 கி.மீ திக்... திக்.. பயணம் செய்துவிட்டு வந்திருக்கிறார், நமது புகைப்படக் கலைஞர் குரூஸ்தனம். அவரது கண்கள் கண்டுகளித்ததை, இதோ நமக்காகக் காட்சிப்படுத்தியிருக்கிறார்!

